Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (30-9-65) இதழ் 230

விசுவாவசு புரட்டாதி 14 ஜ: ஆகிர் பிறை 4 வியாழக்கிழமை

# வல்வெட்டித்துறையில் இராணுவத்தினர் மிரட்டல்!

## இராணுவ ஜீப் மோதி ஒருவர் நிலை கவலைக்கிடம்

வல்வெட்டித்துறை, புதன் வல்வெட்டித் துறையில் நேற்றிரவு இராணுவ ஜீப் ஒன்று வேலும்மயிலும் என்பவர்மீது மோதியதால் அவர் பலத்த காயத்துக்குள்ளானார். காயமடைந்த வேலும் மயிலும் இப்பொழுது கவலைக்கிடமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இவ்விபத்து பற்றி விசாரணைசெய்த பொலிசாரிடமும், பொதுமக்களிடமும் இராணுவத்தினர் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதாகவும் இதனால் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் மோதல் ஏற்படவிருந்ததாகவும் பொலிஸ் அதிகாரிகளும், பருத்தித்துறை எம். பி.யும் யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபரும் ஸ்தலத்துக்குச் சென்று பொதுமக்களை அமைதியுடன் இருக்குமாறும் இதுபற்றித் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக உறுதிகூறியதாகவும் அறியப்படுகிறது.

### ஆகாயத்தை நோக்கிச் சுட்டனர்

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த இ. வேலும்மயிலும் என்பவர் வீதியில் சென்றுகொண்டிருக்கையில் அவ்வீதியால் சென்ற இராணுவ ஜீப் ஒன்று அவரை மோதிவிட்டுச்சென்றதாகக் கூறப்படுகிறது.

இவ்விபத்து பற்றி வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குஅறிவிக்கப்பட்டது. பொலிசார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணைசெய்தனர். இச்சமயம் படுத்தித்துறைக்குச் சென்று திரும்பிய பிரஸ்தாப ஜீப் அந்த இடத்துக்கு வந்துசேர்ந்தது. அங்கு வந்ததும் ஜீப்பிலிருந்த இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி வெடிதீர்த்தனர். இதைக் கண்டு

(6-ம் பக்கம் பார்க்க)

யுத்தநிறுத்தம்பற்றி

# அயூப் - பூட்டோ வேற்றுமை

## பாக். ஆயுதகோரிக்கையை அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்டன், செப். 29

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற தனது நிலைக்கு ஆதரவு தருமாறு பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்கிடம், பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி திரு. பூட்டோ இந்த ஆதரவைக் கோரியதாயும், ஆனால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன், ஐ. நா. ஆதரவிலான ஒரு தீர்வையே அமெரிக்கா ஆதரிக்கும் எனஅவரிடம் கூறப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது. அதேசமயம் யுத்தநிறுத்தம் சம்பந்தமாக பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானுக்கும், வெளிநாட்டுமந்திரி பூட்டோவுக்குமிடையே கருத்து வேற்றுமை நிலவுகிறது என்பதை அமெரிக்க ராஜாங்க இலாகா ஊர்ஜிதம் செய்தது.

### "கபடத்தனம்"

ஐ. நா. பொதுச்சபையில் காஷ்மீர் மந்திரி சையத்மிர்காசிம் இன்று பேசுகையில் பாகிஸ்தான் மக்களுடன் நட்புறவுகொள்ளவே இந்திய மக்கள் விரும்புவதாயும், ஆனால் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இதைத் தடுத்துவிட்டார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

"பாகிஸ்தான் தலைவர்களின் தீய எண்ணத்தை பூட்டோவின் பேச்சு எடுத்துக் காட்டுகிறது என்றும் அவர் கூறினார். "அவர் கூறும் சுயநிர்ணய உரிமை வெறும் கபடத்தனமானது. கடந்த 17 ஆண்டுகளில் பாகிஸ்தானின் இத்தகைய போக்கினால் காஷ்மீர் மக்கள் இருமுறை இரத்தம் சிந்திவிட்டார்கள்" என்றும் திரு. மிர்காசிம் குறிப்பிட்டார்.

தென் ரொடீஷியா

## சுதந்திர பிரகடனத்தை அமெரிக்கா ஏற்காது

வாஷிங்டன், செப். 29

தென் ரொடீஷியா சுதந்திரப் பிரகடனம்செய்வதை அமெரிக்கா தீவிரமாக எதிர்க்குமென உதவி ராஜாங்க மந்திரி நிருபர்களிடம் அறிவித்தார்.

பெரும்பான்மைக் கறுப்பர்களின் சம்மதமின்றி அல்லது சர்வஜனவாக்குரிமை அடிப்படையிலன்றி இவ்விதம் சுதந்திரப்பிரகடனம்செய்யப்பட்டால் தென் ரொடீஷியாவைஅமெரிக்கா அங்கீகரிக்காதென்றும்அவர் கூறினார்.

## உருளைக்கிழங்கு தட்டுப்பாடு இராது

கொழும்பு, செவ்வாய்

ஹாலந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அடுத்தவாரம் 2500 தொன் உருளைக்கிழங்கு இலங்கை வந்துசேரவிருக்கிறது. இவை இங்கு இறக்குமதியானதும் உருளைக்கிழங்கு தட்டுப்பாடு முற்றாக நீங்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1000 தொன் வெங்காயம் பம்பாயிலிருந்து ஏற்றி வந்த கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. மேலும் 500 தொன் வெண்காயம் தூத்துக்குடியிலிருந்து இந்த வார இறுதிக்குள் இங்கு வரும்.

# வடபகுதிக்கு மேலும் 250 இராணுவத்தினர்

## விரைவில் வருகின்றனர்

பம்பலப்பிட்டி, புதன் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களைத்தடைசெய்வதற்கெனவும் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருப்போர்களின் சூழ்ச்சிகளை நிறுத்துவதற்கெனவும் இராணுவப் படையைச் சேர்ந்த 250 பேர் திரட்டப்பட்டு வடபகுதிக்கு அனுப்பப்படவிருப்பதாகத் தெரிய வருகிறது.

இவர்கள் பலாலி ஆனை இறவு ஆகிய இரு இடங்களிலுமே கடமையாற்றுவார்றங்கு சட்டவிரோதக் குடி கள். க்காரர்கள் வந்து யேற்றவதற்குச் சாதகமாகவுள்ள இடமெனக் கருதப்படும் மன்னார்பகுதியில்நிரந்தரப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர்கடமை செய்வார்களெனத் தெரியவருகிறது.

இராணுவ சேவையில் பயிற்சி அளிப்பதற்காகவே இந்த 250 பெயர்களும் தெரிவு செய்யப்பட்டு வடபகுதிக்கு அனுப்பட இருப்பதாக இராணுவப்பகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதிக்கு அனுப்பப்படவிருக்கும் இந்த இராணுவத்தினர் பகுதி பகுதியாகவே அனுப்பப்படுவர் எனத் தெரியவருகிறது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## 'எதிரி பொல்லால் அடித்ததும் பண்டா நிலத்தில் விழுந்தார்'

### வவனியா கொலை வழக்கு விசாரணை

யாழ்ப்பாணம், வியா எதிரியின் கையிலெரிந்துகொண்டிருந்தகாவோலையை இறந்தவர் பறித்ததும், எதிரி பொல்லால் மண்டையில் அடித்தார். உடனே இறந்தவர் நிலத்தில் விழுந்தார்.

வவனியா கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியூ சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சாட்சிமளித்த ந.சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் வவனியாவில் 64-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ந் திகதி இராமசாமி சின்னக்குட்டி என்பவர், ஹொரத்முடியான் சிகே பண்டா என்பவரைக் கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் திரு. சி. நாகராசா, திருவாளர்கள் பி. ரி. ஜி. பிரிட்டோ, கே. ஞானச்சந்திரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. எஸ். பாலகுமார் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

டாக்டர் அமரசிங்கா சாட்சியமளித்தபோது, இறந்தவரைத் தான்பிரேத பரிசோதனை செய்ததாகவும், இறந்தவரின் மண்டையில் மூன்று காயங்கள் இருந்ததாகவும், மூன்று காயங்களும் ஒரு அடியினால் ஏற்பட்டதாகவும் கூறினார்

நல்லதம்பி சந்திரசேகரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடப்பதற்கு மூன்று தினங்களுக்கு முன் இறந்தவர் என்னிடம் வேலைக்கு அமர்ந்தார். அன்று நானும் இறந்தவரும் படுத்திருந்தபோது, அண்ணே, அண்ணே என்று ஒருவர் கூப்பிட்டார். நான் எழுந்திருக்கவில்லை. இறந்தவராகிய பண்டா எழுந்து சென்றார். நான் பின்னால் சென்றேன். எதிரியின் கையில் எரிந்துகொண்டிருந்த காவோலையை இறந்தவர் பறித்தார். உடனே எதிரி பொல்லினால் இறந்தவரின் மண்டையில் அடித்தார். அதன்பின் இறந்தவர் நிலத்தில் விழுந்தார்.

விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

பல்கலைக் கழக

## மாணவர்களின் விடுதி வேட்டை!

உடுநுவர, புதன் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வெளி மாணவர்களில் பலர் தினமும் வீதி வழியாக நடந்து சென்று தாம் தங்கியிருப்பதற்கு விடுதிகளைத் தேடும் காட்சியைத் தற்போது இங்கு காணக்கூடியதாகவிருக்கிறது.

இங்குள்ள கடைக்காரர்களும், வீட்டுச் சொந்தக்காரர்களும் சிறு இடங்களை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு மாதமொன்றுக்கு ரூபா 100, 125 வரை அறவிடுகிறார்கள், உணவு கொடுக்காமலேயே.

சில இடங்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்குக் குளிப்பதற்குக்கூட வசதியற்றவர்களாகவிருக்கிறார்கள். இவர்கள் ஆறுகளையும் குளங்களையும் நாடவேண்டியவர்களாகவிருக்கிறார்கள்.

வடபகுதி

## சாரணர்களின் வருடாந்த விழா

யாழ்ப்பாணம், புதன் சென்ற வாரம் யாழ்ப்பாணக் கச்சேரி ஓல்ட் பார்க்கில் நடைபெற்ற சாரணர் ஆண்டு விழாவின்போது இராசவாசல் முதலியார் ஏ. எல். தசநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இம்மாவட்டத்தில் சாரணர் செய்யும் சாதனைகளைப்போல் இலங்கையின் ஏனைய பகுதிகளில் தான் காணவில்லையென அவர் தமது பேச்சின்போது குறிப்பிட்டார்.

மூன்று நாட்களாக நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். நடராஜலிங்கம் என்னும் சிரேஷ்ட சாரணன் முன்னெப்பொழுதும் செய்திராத ஒரு சாதனையை நிலைநாட்டினார். ஐம்பது அடி உயரத்தில் அறுபது அடி நீளத்தில் கட்டப்பெற்ற கயிற்றின் மூலம் நடந்து காட்டினார்.

வடபகுதியிலுள்ள சுமார் 27 பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த சாரணக் குழுக்கள் இவ்விழாவில் பங்குபற்றின. சிதம்பராக் கல்லூரி, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இவைகளைச் சேர்ந்த சாரணர்கள் திறம்பட தமது சாதனைகளை நிகழ்த்தினர்.

## கதாப்பிரசங்கம்

மாலை 3 மணி முதல் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணி பாகவதர் 'கலைவாணியின் அருள்' என்னும் பொருள் பற்றிக் கதாப்பிரசங்கம்.

வண்ணை சிவன்கோயில் நவராத்திரி விழாவில் மாலை 5 மணிமுதல், சம்பூர்ண மஹாபாரத விரிவுரையில் 'சஞ்சயன்தூது' எனும் பகுதியில் கதாப்பிரசங்கம்.

### கந்தகோட்டத்தில்

நல்லூர்க் கந்த கோட்டத்தில் இரவு 7 மணிமுதல் நாதஸ்வர வித்துவான் திரு சண்முகநாதன் கோஷ்டியினரின் மங்கள இசைக் கச்சேரியும் இரவு 8 மணிக்கு நவராத்திரி விசேஷ பூஜையும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உலகில் யுத்தங்களுக்குக் காரணம், குறுகிய சுயநலப்பற்றுக்கள்தான். நாட்டுப்பற்று, இனப்பற்று, குடும்பப்பற்று, மதப்பற்று முதலிய குறுகிய அபிமானங்கள் மக்களிடையே வேற்றுமைகளையும் சச்சரவுகளையும் வளர்த்து பெரும்போர்களில் முடிகின்றன. தெய்வமே எல்லா உலகிலும் ஆட்சிநடத்துகிற பூரணநம்பிக்கையும் விரிந்த மனப்பான்மையும் வளர, நம் குறுகிய பற்றுக்கள் குறைந்து, சாந்தியும் இன்பமும் பெருகும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு புரட்டாதிமீ 14 உ (30-9-65)


## படித்த வாலிபர் முன்மாதிரி

அப்புத்தளை, பொரலந்தை, பலுகம, வெலிமடை ஆகிய இடங்களிலுள்ள வேலையற்ற படித்தவாலிபர்கள் தங்களுக்கு பேறு உத்தியோகம் கிடைக்காததால், உத்தியோகத்தை எதிர்பார்த்திராமல் காய்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இந்த வாலிபர்களின் மேலான முன்மாதிரியை நாட்டின் இதரபகுதிகளிலுமுள்ள இளைஞர்களும் பின்பற்றினால் நாட்டின் பல பிரச்னைகள் நீங்கிவிடும்.

வேலையில்லாத்திண்டாட்டமும் வாழ்க்கைச் செலவு உயர்வும் தான் இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள இருபெரும் முக்கிய பிரச்னைகள். வேலையில்லாதிருக்கும் படித்த வாலிபர்களுக்கு வேலைதேடித்தரவேண்டுமென்று வாலிபர்களும் மற்றையோரும் கோரிவருகின்றனர். இப் பிரச்னையை அரசாங்கம் தீர்ப்பதற்கு முயற்சிசெய்து வருகிறதென்றும் தனியார்துறையும் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்பளிக்கமுன்வரவேண்டுமென்றும் சில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். தொழிற்கந்தோர்களில் தங்கள் பெயர்களைப் பதிந்துவிட்டு படித்த வாலிபர்கள் பலரும் தங்கள் பொழுதை வீணாக்கித் திரிகின்றனர். உத்தியோகமோகம் இன்னும் நமது இளைஞர்கள் மனதை விட்டு நீங்கவில்லை. உத்தியோகத்தையும் அரசாங்கம் வேலைவாய்ப்புத் தேடித்தருமென்றும் எதிர்பார்த்துக்கொண்டிராமல், தங்கள் சுயமுயற்சியில் நமது இளைஞர்கள் நம்பிக்கை வைத்து முயற்சிசெய்வார்களானால் வேலையில்லாத்திண்டாட்டம் நீங்குவதுடன் அவர்களுக்கும் நாட்டுக்கும் அதனால் நன்மையே கிடைக்கும். அப்புத்தளை, பலுகம, வெளிமடை வாலிபர்கள் காய்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு முன்மாதிரி காட்டியிருக்கிறார்கள். இதை நாட்டின் இதரபகுதிகளிலுமுள்ள இளைஞர்கள் பின்பற்றலாம். விவசாயத்தில்தான் ஈடுபடவேண்டுமென்ற அவசியமில்லை. கடற்றொழிலில் நல்ல வாய்ப்பும் வருமானமும் இருக்கிறது. அதிக மூலதனம் இல்லாமலே சிறுகைத்தொழில்களில் தனியாகவோ, கூட்டாகவோ ஈடுபடலாம். தொழிலில் உயர்வு தாழ்வு பாராட்டும் மனப்பான்மையை விட்டொழித்தால் வேலைவாய்ப்பு நிறையஇருக்கிறது. இதன்மூலம் வேலையில்லாத்திண்டாட்டம் நீங்குவதுடன் வாழ்க்கைச் செலவுப் பிரச்னையையும் நீக்கிவிடலாம். இதனால் இளைஞர்கள் தங்களுக்கும் நாட்டுக்கும் நன்மைசெய்தவர்களாவார்கள்.

## கண்டி வீதிகளில் நம் மாணவர் தவிப்பு

பேராதனைப் பல்கலைக் கழகத்தில், வெளியிலிருந்து கல்விகற்பதற்கு வாய்ப்புக் கிடைத்த மாணவர்கள் பலர் தாங்கள் தங்கியிருப்பதற்கான விடுதிகளைத் தேடும் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். கண்டி வீதிகளில் அவர்கள் வீடுவீடாக ஏறி இறங்கிவிடுதி வசதி தேடுகின்றனர்.

''காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளும்'' மனப்பான்மையுடைய குடியிருப்பாளர்கள், தங்கள் வீடுகளில் 'பலகை' அடித்தும், 'பாகம் பிரித்தும்' இந்த மாணவர்கள் சிலருக்கு கூடிய வாடகையில், 'விடுதி வசதி' செய்து கொடுக்கின்றனர். கண்டியிலுள்ள கிறிஸ்தவ வாலிப சங்கக் கிளையினர் ஒரு புதிய விடுதி அமைத்துப் பணிபுரிகின்றனர். இது வரவேற்கத் தக்க ஏற்பாடு. இதனால் பல்கலைக் கழகத்தில் வெளிமாணவர்களாகக் கல்விகற்க இடம் கிடைத்த மாணவர்களில் சிலருக்கு கண்டி கிறிஸ்தவ இளைஞர் சங்கம் இடவசதியும் உணவு வசதியும் பாதுகாப்பும் அளித்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்தும் நாட்டின் இதர பகுதிகளிலிருந்தும் செல்லும் மாணவர்களில் பெரும்பாலோருக்கும் சிறப்பாக சைவ இளைஞர்களுக்கு இந்த வசதிமிகக்குறைவு. இவர்கள் தாங்களாகவேஎங்கேயாவது இடம் தேடி 'ஒட்டிக் கொள்ளவேண்டும். இதனால் அதிக செலவு ஏற்படுவதுடன் சரியான சூழ்நிலையும் பாதுகாப்பும் இல்லாவிட்டால் அவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்துவதும் முடியாத காரியம். சூழ்நிலையே இளைஞர் வாழ்க்கைக்கு பெரும் கேடாகவும் முடிந்துவிடுகிறது. அவர்களைத் தவறான பழக்கவழக்கங்களுக்கு இட்டுச்செல்வதும் அவர்கள் வாழும்சூழ்நிலைதான்.

எனவே ''உதவியற்ற'' சைவமாணவ மாணவிகளுக்கு இச்சமயத்தில் கண்டியிலுள்ள சைவமகாசபையும் மற்றும் இந்துமத ஸ்தாபனங்களும் உதவியும் ஆதரவும் அளிக்கவேண்டியது அவசியமும் அவைகளின் கடமையும் கூட. இந்த ஸ்தாபனங்களுக்கென சொந்தக் கட்டிடங்கள் இல்லாவிட்டாலும் நல்லசமய சூழலில் கட்டிடங்களை வாடகைக்கு அமர்த்தியாவது சைவமாணவ மாணவிகளுக்கு விடுதி வசதியும் உணவு வசதியும் அளிப்பது நல்லசமயத்தொண்டுமாகும்.

# "சைவம் வளர்ந்தால் தமிழ்வாழும்"

— ஊர்காவற்றுறை எம். பி.

# "இளைஞர்களிடம் சமயஎழுச்சி வேண்டும்"

— உடுப்பிட்டி எம். பி.

## கைதடி சைவமகாநாட்டு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

[கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் இரண்டாவது சைவமகாநாடு நான்கு நாட்கள் கைதடியில் நடைபெற்றது. நான்கு நாள் நிகழ்ச்சிகளும் இங்கு சுருக்கமாக வெளியிடப்படுகிறது.]

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் இரண்டாவது சைவமகாநாட்டின் முதல் நாள் நிகழ்ச்சிகள் தாயுமானவர் அரங்கில் திரு. இ. கந்தையா தலைமையில் கைதடி சங்கித வகுப்பு மாணவிகளின் கடவுள் வாழ்த்துடன் மகாநாட்டுக் கொடியை திரு. கங்காதரன் ஏற்றிவைக்க ஆரம்பமானது. மகாநாட்டை மங்கல விளக்கேற்றிவைத்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் பேசுகையில் ''இந்த நாட்டில் தமிழ் மொழிக்கும், மதத்துக்கும் ஏற்பட்டுக்கொண்டு வரும் இன்னல்களை நாம் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்து அதற்குரிய பணியில் இறங்கவேண்டும்'' என்றார். இதைவிடுத்து இராமன் ஆண்டாலென்ன இராவணண் ஆண்டாலென்ன என்று நாம் இருப்போமானால் மொழி, மதம் விரைவில் அழிந்துபோக நேரிடும். இவை இரண்டும் அழிந்தபின் தமிழரென்று எம்மைக் கூறிக்கொள்வதில் எவ்வித பயனுமில்லை. சைவசமயமும், தமிழும் ஒட்டிப் பிறந்த குழந்தை போன்றதொன்றாகும். ஆகவே மொழி பாதுகாக்கப்படுவதற்குமுன் சமயம் ஒவ்வொரு சைவனாலும் அனுஷ்டிக்கப்படவேண்டும். சைவசமயத்தின் வளர்ச்சியிலேயே தமிழினத்தின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது என்று திரு. நவரத்தினம் கூறினார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், வித்துவான் பொன். கந்தசாமி, பண்டிதர் இ. இராமலிங்கம், பண்டிதர் செ. துரைசிங்கம் ஆகியோரின் விரிவுரைகளும், செல்வி ராதா சோமசுந்தரத்தின் பக்கவாத்திய சகிதமான 'மாங்கனி பெற்ற மங்கை' என்ற கதாப்பிரசங்கமும் இடம்பெற்றது. திரு. அ. சரவணமுத்து தலைமையில் ஐயந்தெளிதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

சைவமகாநாட்டு மலரின் முதல்பிரதியை இந்துசாதன ஆசிரியர் நம. சிவப்பிரகாசம் வெளியிட்டுவைத்தார். கைதடி கிராமசபைத் தலைவர் க. தம்பிப்பிள்ளை வாங்கினார். விழா ஆரம்பமாவதற்குமுன் ஞா. குமாரசாமி தலைமையில் கைதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து மங்கலவாத்தியத்துடன்திருமுறை ஏட்டுச்சுவடி ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டது.

### இரண்டாம்நாள் நிகழ்ச்சி

சைவசயத்தில் மனிதன் ஒவ்வொருவரும் எந்தத் துறையை அடைய விரும்புகின்றானோ அந்தத்துறையை அடைய வழிவகுக்கப்பட்டுள்ளது. இதை அடைவது மனிதனின் செயல்முறையைப் பொறுத்ததேயாகும். இதன்படி இறைவனை அடைய நாம் இறைவனுக்குத் தொண்டு செய்யவேண்டும். இறைவனை அடைய வேண்டுமாயின் அன்பினாலேயே அடைய முடியும். இதைவிடுத்துசிகரம், வாணவேடிக்கை, தவில்கச்சேரி ஆதியவற்றால் அடைய முடியாது. இவற்றினை ஆலயங்களிலிருந்து நீக்க வேண்டும். இவற்றை நீக்க வேண்டுமாயின்இளைஞர் சமுதாயத்தில் எழுச்சி ஏற்பட வேண்டும். சாதிப் பிரிவினை நமது சமயத்திற்கு நல்லதல்ல. தொன்றுதொட்டு இல்லாத அந்த வேற்றுமை இடையிலே வந்து புகுந்து கொண்டது. நமது சமயத்திற்கு எல்லாத்திசைகளிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்புவதால் இந்த நேரத்தில் எமது இளைஞர்கள் தம்முள்ளே உயர்வுதாழ்வு என்னும் பேரம் பேசுவதைத் தடுத்து எம் மதத்தைத் காக்க முன்வர வேண்டும்,

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் இரண்டாம்நாள் அருணகிரிநாதர் அரங்கில் நடைபெற்றபோது அதற்குத் தலைமை வகித்துப்பேசுகையில் கூறினார்.

தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை நிகழ்ச்சிகளை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வித்துவான் மு. சபாரத்தினம், பண்டிதயர் பொன். கிருஷ்ணபிள்ளை, சைவப் புலவர் த. சுவாமிநாதன் ஆகியோரின் விரிவுரைகள் இடம்பெற்றன. ஐயந்தெளிதல் நிகழ்ச்சி பண்டிதர் க. வீரகத்தி தலைமையில் நடைபெற்றபோது சைவப்புலவர் சி. வல்லிபுரம் கருத்துரையாளராகக் கலந்து கொண்டார். கலைநிகழ்ச்சி வித்துவான் ச. கந்தையா தலைமையில் நடைபெற்றது. கைதடி செவிடர் குருடர்பாடசாலையின் இன்னிசை விருந்தும் தனங்கிளப்பு இந்து வாலிபர் சங்கத்தின் ''பித்தன் யார்'' என்ற நாடகமும் இடம்பெற்றன.

### 3-ம் நாள் நிகழ்ச்சிகள்

''சைவசமயத்தவருள்இருவகையான மூட நம்பிக்கையும் பிழையான பழக்கவழக்கமும் உண்டு. ஒன்று கோயில்களில் உயிர்ப் பலியிடுதல். மற்றது சாதிவேறுபாடு பாராட்டுதல். இவை இரண்டையும் சைவசமுதாயத்திலிருந்து நீக்கி சைவம் சிறந்தோங்க இப்படிப்பட்ட சங்கங்கள் மலியவேண்டும்'' என்று சேக்கிழார் அரங்கில் நடைபெற்ற மூன்றாம்நாள் சைவமகாநாட்டு நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்த திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினார். அவர் மேலும் பேசுகையில் நமது சமயம் அறிவின் அடிப்படையிலே வகுக்கப்பட்டிருப்பதனாலேயே அது பலநூற்றாண்டு காலமாக அழியாது சிறப்பாகஇருந்துவருகின்றதென்றும் இன்று மக்கள் மத்தியில் தாண்டவமாடும் சாதிப் பிரிவினை நமது சமயத்திற்கு உகந்ததல்லவென்றும் கூறினார்.

யாழ்ப்பாண மேயர் சு. செ. மகாதேவா விழாவை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் 'இத்தகைய' மகாநாடுகளினால்தான் சமயத்தை நாட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுவது

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அமெரிக்காவுக்குச் செல்ல இருக்கின்றார். ஏன்? தங்களுக்கு ஆயுதங்களைத் தொடர்ந்து அனுப்ப வேண்டுமென்று கேட்கத்தானும்.

இந்திய-பாகிஸ்தான் சண்டை மூண்டதும் அமெரிக்காவும் பிரிட்டனும் ஆயுதங்களை அவ்விரு நாடுகளுக்கும் அனுப்புவதில்லை என்று தடைபோட்டன. இந்தத் தடை மிகவும் சரியானது. சண்டை நடக்கையில் தொடர்ந்து ஆயுதங்களை அனுப்புவது எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போலிருக்கும்

சீனாவினால் தனக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாயும், தங்களுக்கும் தொடர்ந்து ஆயுதங்களை அனுப்பவேண்டுமென்றும் இந்தியாவும் அமெரிக்காவைக் கேட்பதாகத் தெரிகிறது.

இந்த தர்மசங்கடமான நிலையில் அமெரிக்கா என்ன செய்யப்போகிறது? இதைப் பற்றி ஒரு சரியான முடிவு செய்வது சுலபமன்று. சிறப்பாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சண்டை நின்றதாகத் தெரியவில்லை. ஐ. நா. சபை, சண்டை நிறுத்த உத்தரவிட்டதெனினும், இரு நாடுகளும் பல முறைகளில் போராடிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன. இந்நிலையில் அவர்களுக்கு மேலும் ஆயுதங்களைக் கொடுப்பதாயின், அது சமாதானத்துக்கு வழி செய்ய முடியாது. இதற்கு மாறாக, ஆயுத சப்ளையை நிறுத்தினால், இரு நாடுகளும் தங்கள் தகராறுகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்ள முற்படக்கூடும்.

ஃ ஃ

இந்தியாவுக்கு சீன ஆபத்தைக் குறைக்க ஒரே சரியான வழி, புதுச்சீனத்தை ஐ. நா. சபையில் சேர்த்துக் கொள்வதுதான். ஒரு சின்னத் தீவான சிங்கப்பூரை ஐ. நா. ஸ்தாபனத்தில் மெம்பராகச் சேர்த்துக் கொண்டபோது, பெரிய நாடான புது சீனத்தை அமெரிக்கா ஒதுக்கிவருவது எப்படிச் சரியாகும்?

இவ்விதம் ஒதுக்குவதால் புதுசீனம் வேறுவழியின்றி போட்டி ஐ. நா. சபையை ஆரம்பிக்க முற்படுகின்றது. ஐ. நா.விலிருந்து இந்தோனேஷியாவை வெளியே இழுத்தது போல், பாகிஸ்தான் முதலிய நாடுகளையும் இழுக்கப் பார்ப்பது இயற்கை. ஐ. நா. விலே புதுசீனத்துக்கு இடம் அளிப்பதானால் இவ்வித கோணல் வழிகளில் அது செல்ல வேண்டிய அவசியமிராது.

இடமளித்தும் புதுச்சீனம் பிடிவாதம்செய்து சேரமறுப்பதாயின் அது அதன் பொறுப்பு. பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கும் பின்னர் சீனத்தின் மீது அனுதாபம் இல்லாமற்போகும். ஐ. நா. வில் அதற்கு இடம்கொடாமல் இப்போது இருப்பதால் தான், பல ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் புதுச் சீனத்தின் மீது மறைமுக அனுதாபம் இருக்கின்றது. அதே அனுதாபத்தை இழக்க புதுசீனம் விரும்பமுடியாது.

ஃ ஃ ஃ

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று கூறுவதுண்டு. ரஷ்ய, சீன கம்யூனிஸத்தைத்தடுக்க, 'சென்டோ', 'ஸியாட்டோ' 'நாட்டோ' என்ற பல ராணுவக்கூட்டுகளுக்கு அமெரிக்கா ஏற்பாடு செய்தது. பாகிஸ்தான் முத

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ. நா. பொதுச்சபையில்:

# மீண்டும் பூட்டோவின் போர் முழக்கம்!

## "கடைசிச் சந்தர்ப்பம் அளிக்கிறேம்; காஷ்மீர் பிரச்னைதீராவிடில் போர் விரியும்"

### ஸ்ரீநகர் மின்சாரசப்ளை துண்டிக்கப்பட்டதாய் பாக். தரப்பில் அறிவிப்பு

நியூயோர்க், செப். 29

"ஐ. நா.வுக்கு பாகிஸ்தான் கடைசிச் சந்தர்ப்பத்தை அளிக்கிறது. காஷ்மீர் பிரச்னையை அது தீர்க்க வேண்டும். இன்றேல் உலக ஸ்தாபனத்தைவிட்டு வெளியேறுவோம். இந்திய உபகண்டத்தில் பெரும் போர் மூளும்" என நேற்று ஐ. நா. பொதுச்சபையில் பேசிய பாகிஸ்தான் வெளிநாட்டுமந்திரி பூட்டோ மீண்டும் எச்சரிக்கை விடுத்தார்.

திரு. பூட்டோ ஒருமணி நேரம் சபையில் பேசியபோது, காஷ்மீரிலிருந்து இருபகுதித் துடுப்புகளும் வாபஸ் பெற்றபின் ஐ. நா. மேற்பார்வையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற பாகிஸ்தானின் பழைய நிலையை மீண்டும் வற்புறுத்தினர்.

ஜப்பான், ஜோர்டான், ஆசிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்த யோசனையை ஆதரித்துப் பேசினர்.

### கடைசிச் சந்தர்ப்பம்

கடந்த 18 ஆண்டுகளாக காஷ்மீர் பிரச்னையைத் தீர்க்கத் தவறியதற்காக பாதுகாப்பு சபைமீது திரு. பூட்டோ கண்டனம் தெரிவித்தார்.

"இப்போது கடைசிச் சந்தர்ப்பத்தை அளிக்கிறேம் ஐ. நா.வில் நம்பிக்கை வைத்திருக்கும் எல்லா நாடுகளும் இந்த 18 ஆண்டுப் பிரச்னைவைத் திர்க்க வேண்டும். இன்றேல் வெளியேறுவோம். பெரும் போர் நடைபெறடு போகிறது" என்றும் திரு. பூட்டோ கூறினர்.

### தற்பாதுகாப்புக்குப் போராடுகிறேம்

"பாகிஸ்தான் தற்பாதுகாப்புக்காகப் போராடி வருகிறது. எங்கள் கௌரவத்தைக் காப்பதற்காகப் போராடி வருகிறேம். காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை பாகிஸ்தான் கைவிடாது. இதுவே இறுதித் தீர்வாக இருக்க வேண்டும்" என்றர் பூட்டோ,

### சீனவைச் சேருங்கள்

அதேசமயம் திரு. பூட்டோ சீனவை ஐ. நா.வில் சேர்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். சீன இல்லாத ஐ. நா. வலுவுடன் இயங்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

### ஸ்ரீநகர் மின்சார சப்ளை துண்டிப்பு?

இதற்கிடையில் "விடுதலைவீரர்கள்" ஸ்ரீநகருக்கான மின்சார சப்ளையைத் துண்டித்துவிட்டதாயும், எனவே அந்நகரம் இருளில் மூழ்கிவிட்டதாயும் காஷ்மீரின்குரல் வானெலி அறிவித்தது. ஜம்மு-ஸ்ரீநகருக்கிடையேயான டெலிபோன் தொடர்புகளையும் அவர்கஅ துண்டித்துவிட்டதாயும் மேலும் அது அறிவித்தது.

காஷ்மீரில் பல இடங்களில் இந்தியத் துருப்புகளுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டதாய் தொடர்ந்துகூட கூறப்பட்டது. நேற்று மொத்தம் 28வீரர்சளைக்கொன்றதாயும் அது அறிவித்தது.

யுத்தநிறுத்தத்தை இந்தியா பலஇடங்களில் மீறிவருவதாயும் தொடர்ந்து அவர்கள் மீறினல் பாகிஸ்தான் திருப்பியடிக்கும் என்றும் ராவல்பிண்டியில் அதிகாரி ஒருவர் கூறினர்.

"பாகிஸ்தான் தனது

## துருப்புக்களுடன் ஊடுருவாளரையும் விலக்கிக் கொள்ள வேண்டும்

### இந்திய துருப்புக்கள் அப்போதுதான் வாபஸ் செய்யும்"

- பார்த்தசாரதி

நியுயோர்க், செப். 29

பாகிஸ்தான் போர் நிறுத்தத்தை அனுசரிக்கும்படிசெய்ய வேண்டும் என்றும், தனது முறையான துருப்புக்களையும், ஆயுதம் தாங்கிய ஊடுருவாளர்களையும் அது வாபஸ் செய்யும்வரை இந்தியத் துருப்புக்கள் தாங்கள் பிடித்த நிலைகளிலிருந்து வாபஸ்பெற மாட்டாது என்றும் திரு. ஜி. பார்த்தசாரதி ஐ. நா. பொதுச் சபையில் நேற்றுப் பேசியபோது அறிவித்தார்.

ஊடுருவல், முறையான படை வெளியேற்றம் ஆகியவற்றுடன்தான் இந்தியாவின் படைவிலக்கத்தையும் இணைக்கவேண்டும் என அவர் மேலும் கூறினர்.

"பாகிஸ்தான் இதற்கு முழுப்பொறுப்பை ஏற்க வேண்டும். இருதரப்பினரும் விலகியபின் யுதாண்ட் தனது பிரதிநிதி ஒருவரை, அல்லது பார்வையாளர் குழு ஒன்றை அனுப்பவேண்டும். என்றும் பார்த்தசாரதி கூறினர்.

இதற்குமுன் பொதுச் சபையில் பேசிய பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ காஷ்மீரிலிருந்து இந்திய, பாகிஸ்தான் துருப்புக்கள் விலகிக் கொள்ளவேண்டும் என்றும், அங்கு ஆசிய. ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கொண்ட ஐ. நா. சமாதானப்படை ஒன்றை ஸ்தாபிக்கவேண்டும் என்றும் பின் ஐ. நா. ஆதரவில் அங்கு சர்வஜனவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

### பூட்டோவுக்கு பதில்

இந்திய தூதுகோஷ்டியைச் சேர்ந்த காஷ்மீர் மந்திரி திரு சையத்மீர்காஸிம் பேசியபோது உலக அரங்கை குழப்பத்தில் ஆழ்த்துவதே பாகிஸ்தானின் நோக்கம் என்றும், கடந்த 18 ஆண்டுகளில் காஷ்மீரை அது இரு தடவை ரணகளமாக்கியிருக்கிறதென்றும் கூறினர்.

இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இந்தியா ஒரு தரப்பான முறையில் போர்நிறுத்தம் செய்யமுடியாது என்றர். "தாக்கப்பட்டால், தற்காப்புக்காக திருப்பித்தாக்குமாறு எங்கள் படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேம். பாகிஸ்தானில் உயர்தலைவர்களின் அறிக்கைகள் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. திரு. பூட்டோ, தான் குறிப்பிடும் 'அரசியல் பிரச்னை' பாகிஸ்தானின் திருப்திக்கேற்ப தீர்க்கப்படாவிட்டால் பெரும் போர் மூளும் என மிரட்டுகிறர். சமாதானத்தைக்காக்கும் பாதுகாப்பு சபையிலேயே இந்த மிரட்டல் வெளியாகியிருக்கிறது" என்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

### சுவர்ண்சிங்

மாஸ்கோ சென்றிருந்த இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவர்ண்சிங், நேற்றிரவு லண்டன் வந்தபின் இன்று மாலை நியுயோர்க் புறப்பட்டார்.

மாஸ்கோ விமான நிலையத்தில் திரு. சுவர்ண்சிங் தற்காலிக ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குஸ்நட்ஸோவுடன் ஒரு மணி நேரம் பேச்சுநடத்தினர். கண்ணியமான நியாயமான அமைதிக்கு இந்தியா மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சிக்கும் ரஷ்யா பரிவும், ஆதரவும் காட்டும் என ரஷ்ய மந்திரி அப்போது உறுதியளித்தார். உதவி வெளிநாட்டு மந்திரியுடனும் திரு. சுவர்ண்சிங் பேச்சு நடத்தினர். இதர ரஷ்ய அதிகாரிகளையும் அவர்சந்தித்தார் திரு சுவர்ண்சிங்கை கௌரவிக்கும் பொருட்டு திரு. குஸ்நட்ஸோவ் ஒரு இரவு விருந்தளித்தார்.

இப்போதைய சண்டை நிறுத்தத்தை சீனவுடன் கூட்டுச்சேர்ந்து, இந்தியா வைத்தாக்க பாகிஸ்தான் முயற்சிக்கக்கூடும் என திரு. மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிருர்.

### யுத்தநிறுத்தம் மீறல்

இதற்கிடையில் பலமுனைகளில் பாகிஸ்தான் யுத்த நிறுத்தத்தை மீறியிருப்பது குறித்து தகவல்கள் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பூஞ்சிற்கு இரண்டரை மைல் தெற்கே 2 பாகிஸ்தான் படைப்பிரிவுகள் திடீரெனத்தாக்கி ஒரு பாரத அதிகாரியை கடத்திச்சென்றதாய் அறிவிக்கப்படுகிறது. பொதுவாக எல்லா அரங்குகளிலும் பாகிஸ்தானியர் போர் நிறுத்தத்தை மீறிவருவதாய் அறிவிக்கப்படுகிறது.

### கிராமங்களை எரித்தனர்

பாகிஸ்தானிய துருப்புக்கள் கேம்கரன் பட்டினத்தையும், பல கிராமங்களையும் எரித்ததாக மேலும் அறிவிக்கப்படு றது.

ராஜஸ்தானில் இழந்த கிராமம் ஒன்றை மீண்டும் பிடித்திருப்பதாயும். ஜம்மு காஷ்மீரில் ஊடுருவாளர்கள் தொடர்ந்து விரட்டப்படுவதாயும் அறிவிக்கப்பட்டது.

பார்லிமெண்ட் கூடாமலிருக்கும் சமயத்தில் ஆலோசனை கலக்குமுகமாக பல்வேறு கட்சிகளைச்சேர்ந்த எழுவர் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

---

## 4-ம் திட்டம் குறையுமா?

புதுடில்லி, செப். 29

4-வது ஐந்தாண்டுத்திட்டத்தை மறுபரிசீலனைசெய்வதுபற்றி திரு. சாஸ்திரியின் தலைமையில், நேற்று உயர்நிலை கூட்டம் ஒன்று நடைபெற்றது.

---

## சீனவின் சமத்துவகொள்கை

பீகிங், செப். 29

பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்குமிடையே சமத்துவக் கொள்கையை சீன ஆதரிப்பதாய், அந்நாட்டு ஜனதிபதி லியூஷாசீ கூறினர்.

---

பாக். தாக்குதலுக்கு

## 20 ரயில்வே ஊழியர் பலி

புதுடில்லி, செப். 29

யுத்தநிறுத்தத்துக்கு முன் பாகிஸ்தான் நடத்திய விமானத் தாக்குதல் காரணமாக 20 ரயில்வே சிப்பந்திகள் கொல்லப்பட்டனர் என்றும், 14 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## டாக்டர்

பெல்கிரேட், செப். 29

இங்கு வரவிருக்கும் இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு யூகோஸ்லேவியாவின் மிகப் பழமைவாய்ந்த பல்கலைக்கழகம் தத்துவக்கலாநிதி என்ற கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கவிருக்கிறது,

## முஸ்லீம்கள் ஆர்ப்பாட்டம்

வேலூர், செப். 29

இங்குள்ள பல்லாயிரக் கணக்கான முஸ்லீம்கள் நேற்று பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக்கெதிரான கோஷங்களுடன் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடத்தினர்.

## 1500 பேர் மாண்டனர்

மணிலா, செப். 29

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு காரணமாக இதுவரை 1500 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 10000 பேர் வீடிழந்தனர்.

## தென்வியட்னும்

சைகோன், செப். 29

தென்வியட்னுமில்கொரில்லாக்கள் நடத்திய ஒரு தாக்குதலில் அரசாங்கத் துருப்புகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

---

## பாடசாலையில் சாதித்துவேஷம்

### விசாரணை செய்கின்றனர்

சுழிபுரம், புதன்

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியர் ஒருவர் சாதிப்பாடு காட்டியதாக வடபகுதி உதவிவித்தியாதிபதிக்கும், வட்டுக்கோட்டை எம். பி. க்கும் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து கல்விஇலாகா மற்படி புகாரை விசாரணை செய்கின்றனர். விசாரணையின் முடிவு விரைவில் வெளியாகுமெனத் தெரியவருகிறது.

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், வியா.

கொக்குவில் கலாபவனம் நவராத்திரி விழா இன்று தொடக்கம் சனிக்கிழமை வரை நடைபெறும். கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தின் தெனபாலமைந்த கலாபவன திறந்த வெளியரங்கில் கலைநிகழ்ச்சிகள் இடம்.

இன்றைய நிகழ்ச்சிகள்

6-39—8-00 மங்களவாத்தியம், 8-00—8-45 செல்வி நவமணிதேவி நாகலிங்கம், பாட்டு 8-45—10-00சங்கித பூஷணம் கே. ஆர். நடராசா பாட்டு, 10-00—10-15திரு. நீதிராசா ஜே. பி. தலைமையுரை, 10-15 கலாபவன மாணவிகள்பரதநாட்டியம்.

ஃ ஃ ஃ

யாழ். வண்ணை நாவலர் பாடசாலை பொன்னப்பல இல்லத்தாரின் நான்காம் நாள் நவராத்திரிவிழா இல்லத்தலைவர் திரு. சி.பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

சக்திவழிபாட்டின்மகிமை பற்றி பிரம்மஸ்ரீ வை.ஆத்மநால சர்மா, வித்துவான் இ. திருநாவுக்கரசு, பிரம்மஸ்ரீ கா. கிருஷ்ணசாமி ஐயர், திருவாட்டி ம. சண்முகரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஃ ஃ ஃ

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் வழமைபோல் இம்முறையும் சரஸ்வதி பூசை கொண்டாடப்பட்டு வருகிறது. இறுதிப்பூசை வருகிற ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும்.

## கலைப்பகுதிக்கு 3900 மாணவர்கள்

பம்பலப்பிட்டி, புதன்

அண்மையில் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தர) கலைப் பகுதி பரீட்சைப் பெறுபேறுகளின்படி 3,900 மாணவர்கள் இலங்கை சர்வகலாசாலையில் இடம்பெற்றுள்ளார்கள் என்று சர்வகலாசாலைஉப-வேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலை தெரிவித்துள்ளார்.

இத்தொகையில் 2,800 மாணவர்கள் கொழும்பிலும் மிகுதி மாணவர்கள் பேராதனையிலும் கல்வி பயில்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்றூர்"

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணத்தவன் என்னும் சொற்கள் ஆர்வமொழிகளாக இலங்கையிலும் மலாயாவிலும் முழங்கி வந்தன. யாழ்ப்பாணக்கல்லூரி அதிபராக இருந்த காலஞ்சென்ற கனம் ஜோன் பிக்னல் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலம் அது. கொழும்பிலே ஆனந்தக் கல்லூரி பழைய மாணவர் சங்க விருந்திலே கலந்துகொண்ட கனம் பிக்னல் பாதிரியார் தமது பேசும் முறை வரவே எழுந்து நின்று வழக்கம்போல் செருமிவிட்டு "நான் யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்றேன்" எனத் தம் பேச்சை ஆரம்பித்ததும் ஐந்து நிமிடங்களுக்கு அம்மண்டபத்தில் ஒரே சிரிப்பு. கொழும்பு கிறிஸ்தவ வாலிப சங்கத்தாரால் அரங்கேற்றிப் பேரும் புகழும் அந்தக் காலத்தில் ஈட்டிய "ஹீ கம்ஸ் பிரம் ஜாப்ன" என்னும் நாடகமே அச்சிரிப்புக்குக் காரணம். அந்த நாடகம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் பல சிறந்த கலைஞர்களால் வருகிற சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடிக்கப்படுகிறது.

— ரஸிகன்

## ரசிக ரஞ்சன சபாவின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண ரசிக ரஞ்சன சபாவின் விசேட பொதுக்கூட்டம் சபாவின் காரியாலயத்தில் திரு. ஆர். சி. மன்மதராயன் தலைமையில் நடைபெற்றபோது, சபாவின் ஆதரவில் இயங்கி வரும் இசைக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் போதிய ஆதரவு கோரப்பட்டது.

புதிய உத்தியோகத்தர் விபரம். தலைவர்- திரு. ஆர். சி. மன்மதராயன், உபதலைவர்கள்- திருவாளர்கள் ஏ. எஸ். இராசையா, சி. செல்லத்துரை, காரியதரிசி- திரு. எஸ். தம்பையா, உபகாரியதரிசி- திரு. சி. வீரசிங்கம், தனுதிகாரி- திரு. கே. வி. தம்பு, உபதனுதிகாரி- திரு. வி. கோவிந்தபிள்ளை, போஷகர்- திரு. டி. முத்துசாமிப்பிள்ளை. திரு. ஏ எஸ். இராசையா இசைக் கல்லூரி மனேஜராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## பால்பண்ணை ஊழியர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல்

சுழிபுரம், புதன்

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணை சங்கத்தில் வேலை செய்யும் சகல ஊழியர்களுக்கும் வேலை நீக்க அறிவித்தல் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. பால் ஒப்பந்தங்கள் காலாவதி அடைவதும், பால்விநியோகம்சம்பந்தமாக சுகாதாரப்பகுதியினரால் கூட்டுறவுப்பகுதியினரால் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்தல்களுமே வேலைநீக்க அறிவித்தல்களுக்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

## கல்விமந்திரியை பேட்டி காண்பர்

சுழிபுரம், புதன்

விவசாய ஆசிரிய மாணவர் பதவி நியமனத்தில் தங்களுக்கு முதல் சலுகை அளிக்கவேண்டும் எனக் கோரி வடமாகாண கிருஷிகப் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்தினர் நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லையைப் பேட்டி காணவிருக்கிறூர்கள்.

# 'தபால் ஊழியர் சேவை செய்ய கடமைப்பட்டவர்'

## வேலைக்கு திரும்புமாறு மந்திரி வேண்டுகோள்

பம்பலப்பிட்டி, புதன்

தபால் தந்தி ஊழியர் வேலைநிறுத்தம்பற்றி தபால் தந்தி மந்திரி மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம பாராளுமன்றத்தில் பேசுகையில், அரசாங்கம் வேலைநிறுத்தம் பற்றி வலுவான நடவடிக்கைகள் எடுக்க உத்தேசித்துள்ளதென்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது;— தபால் ஊழியர்கள் பொது மக்களுக்கு கடமை செய்வதில் கண்ணியமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். இந்தத் தருணத்தில் எதிர்க்கட்சியினரும் அரசாங்கத்திற்கு ஏகோபித்த ஆதரவைக் கொடுப்பதாக வாக்குறுதி யளித்துள்ளார்கள். ஆகையால் வேலை நிறுத்தம் செய்வோரை உடனடியாக வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு வருடமும் 5000 பதிவுத் தபால்கள் காணுமலும் உரியவர்களிடம் சேர்வதில்லையெனப் புகார் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் ஊழியர்கள் வேலைசெய்யும் நேரங்களில் சூதாட்டத்திலும்—மது போதையிலும் இருப்பதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வேலைநிறுத்தத்திற்கு ஒருவிதமான காரணமுமில்லை. இந்தமாற்றத்திட்டம் அமைச்சர் திரு. பொல்பொல இருந்தகாலத்திலேயே நடைமுலைக்குக் கொண்டுவரப் பட விருந்தது. ஆனல் ஜனப்பிரதிநிதிகள் சபை கலைக்கப்பட்டதன் காரணத்தினுலும் தேர்தல் நடைபெறவிருந்ததாலும் இந்த மாற்றங்கள் செயற்படுத்தப்படவில்லை.

பதிவுத் தபால்பகுதி, பார்சல்பகுதி முதலிய இடங்களில் கடமையாற்றும் ஊழியர்களை கொழும்பிலுள்ள இரண்டுமைல் சுற்றளவிற்குள்ள காரியாலயங்களுக்கு மாற்றும்படி நான்நிரந்தரக் காரியதரிசிக்கு உத்தரவிட்டிருந்தேன். இந்த மாற்றங்கள் நிர்வாகத்திலுள்ள சீர்கேடுகளைக் குறைப்பதற்காகவே செய்யப்பட்டுள்ளன.

தபால் ஊழியர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுதபால் விநியோகத்தில் சீர்கேடுகளை உண்டாக்கியுள்ளதையிட்டு நான் மிகவும் வருந்துகின்றேன்,

வேலைநிறுத்தம் செய்வோர் இடமாற்றத்திற்குட்பட்டு வேலை செய்யவேண்டும். அப்புடிச் செய்யத்தவறின் கடிதங்கள் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளை நான் எடுப்பேன் என்று தொழிலாளர்களுக்குத் தெரிவித்துள்ளேன்.

## சாதிப்பாகுபாடு ஒழிப்புக் கூட்டம்

நெடுந்தீவு, புதன்

சென்றவாரம் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் சாதி பாகுபாடு ஒழிப்புவாரம் கொண்டாடப்பட்டது.

சென்ற வியாழக்கிழமை பாடசாலை அதிபரின் தலைமையில் கூடிய ஆசிரியர்கள் மாணவர்கள் அடங்கிய கூட்டத்தில் தலைவர் பேசிய போது "சாதியை இறைவன் படைக்கவில்லை; மனிதன்தான் உண்டாக்கினுன். அக்கால மனிதன் உண்டாக்கிய தவறை நாமும் கடைப்பிடித்து வருவது வெட்கத்திற்கும் வேதனைக்கும் உரிய செயலாகும்" என்று சொன்னுர்.

மாணவர்கள் உட்படப் பல ஆசிரியர்களும் பேசினர்.

களவும் கடிதங்கள் உடைப்பனம் நிறுத்தப்படவேண்டும்.

## அந்தியேட்டிக்கு சென்றூர் கள் குடித்தபின் மாண்டார்

யாழ்ப்பாணம், வியா.

தந்தையின் அந்தியேட்டியைச் செய்யக் கீரிமலைக்குப் போனவர் தனது உயிருக்கே உலைவைத்துக்கொண்ட சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

புங்குடுதீவைச் சேர்ந்த கார்டிரைவர் (35 வயது) சின்னத்தம்பி வேலாயுதம்பிள்ளை என்பவரின் மரண விசாரணையின்போது தான் மேற்கண்ட தகவல்கள் தெரியவந்தது. யாழ். நகரப்பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினுர்.

வேலாயுதம்பிள்ளையின் தகப்பனுரின் அந்தியேட்டிக் கிரியைகளைச் செய்வதற்காக அவரும், அவரது மாமனுரான தம்புஐயம்பிள்ளையும் கீரிமலைக்குப் போனதாகவும், அங்கு கிரியைகள் செய்து முடிக்கப்பட்ட பின்னர் வேலாயுதம்பிள்ளையும், மாமனுரான ஐயம்பிள்ளையும் கூவில் என்ற இடத்துக்கு சென்று கள்ளுக்குடித்துவிட்டுத் திரும்பி வந்ததாகவும் இதனைத் தொடர்ந்து வேலாயுதம்பிள்ளை வாந்தி எடுத்ததாகவும் பின்னர் அவருக்கு நெஞ்சுவலி ஏற்படவே காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக்கொண்டுசென்றபோது அங்கு மரணமானதாகவும் மரணவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் வி. கருணுகரனும் சாட்சியமளித்தார்.

இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## 'கனவுலகக் கன்னி காலமானுர்'

ஹாலிவூட், செப். 29

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் பலகோடி வாலிபர்களின் கனவுலகக் கன்னியாகவிருந்த மௌனப்பட நடிகை கிளாரா போ நேற்று முன்தினம் காலமானுர். இவர் இறக்கும்பொழுது வயது 60.


# அன்பின் இன்பக் கனி






அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பெலஞன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

# ஒஸ்டர்மில்க்

173/66

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற்பெட்டி 23, கொழும்பு.

## ஐந்தாம் வகுப்பு மூன்றும் தவணை

ஐந்தாம் வகுப்பு மாணவர் தாம் படித்த பாடங்களைத் திருப்பிப் பயிற்சி செய்யவும், பரீட்சையில் வருவன போன்ற வினுக்களுக்கு விடையெழுதிப் பழகவும் ஏற்ற பயிற்சிப் புத்தகங்கள் தயாராக உள்ளன.

விஞப்பத்திரங்கள்

| | |
|---|---|
| தமிழ் (பாஷை) | சதம் 70 |
| கணிதம் | சதம் 70 |
| சூழல் | சதம் 70 |
| ஆங்கிலம் | சதம் 70 |

பாடத்திட்டம் முழுவதையும் வினு விடை உருவத்தில் அமைத்த

ஐந்தாந்தரச் சூழல் (1100 விஞவிடை) ரூ. 1-80

ஐந்தாந்தர மொழி நூல் (பயிற்சிக்குரிய) ரூ. 1-40

ஷை நூல்களை எழுதியவர்:
வே. க. கந்தசாமி
(புதுமை லோலன்)

விற்பனையாளர்:
ஆனந்தா அச்சகம்
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

யாழ்ப்பாணம் மாநகரசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### சந்தைக் குத்தகை - 1966

கீழ்வரும் சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரால் 20-10-65-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 20-10-65 ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிவரை வழங்கப்படும்.

| சந்தைகளின் பெயர்கள் | கேள்விப் பத்திரத்தின் விலை | கேள்விப் பத்திரங்களை முன்வைக்கும்போது செலுத்தப்பட வேண்டிய பொறுப்புப் பணம் | கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் செலுத்த வேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 2. பெரியகடை மீன்சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 3. பெரியகடைக் காலே | 10-00 | 250-00 | 250-00 |
| 4. சின்னக்கடைச் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 5. செங்குந்தர் சந்தை | 10-00 | 250-00 | 250-00 |
| 6. அரியாலேச்சந்தை பழையது | 2-50 | 50-00 | — |
| 7. அரியாலேச் சந்தை புதியது | 2-50 | 50-00 | — |
| 8. முத்திரைச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 9. கொழும்புத்துறைச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 10. நாவாந் துறைச்சந்தை பழையது | 2-50 | 50-00 | — |
| 11. நாவாந்துறைச் சந்தை புதியது | 2-50 | 50-00 | — |
| 12. பாஷையூர்ச் சந்தை | 2-50 | 50-00 | — |
| 13. பண்ணே மீன் சந்தை | 2-50 | 50.00 | — |
| 14. நாச்சிமார்கோவில் சந்தை | 2-50 | 50-00 | — |
| 15. பெரியகடை மீன்சந்தைக்கு அருகாமையில் சயிக்கிள் பாதுகாத்துக் கொடுக்கும் இடம் | 2-50 | 50-00 | — |
| 16. பெரியடை மீன்சந்தையில் சாமான்கள் கட்டும் கடதாசி விற்குமிடம் | 2-50 | 50-00 | — |

இதர விபரங்களைக் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறிந்துகொள்ளலாம்.

ஆணையாளர்
யாழ்ப்பாண மாநகரசபை
தா த.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 24-9-65


உ
சிவமயம்
கொக்குவில் கலாபவன

## நவராத்திரி விழா

(நாதஸ்வரம் - வாய்ப்பாட்டு -பரதநாட்டியம்)

30-9-65 — 2-10-65

மாலே 6-30 மணி
தொடக்கம்



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகப் பெருமான் ஆலயத்தின் தென்பாகத்திலமைந்த

**கலாபவன திறந்த வெளியரங்கில்**

தினமும் மூன்று நிகழ்ச்சிகளும் நிகழும்

**அபிமானிகளையும் அன்பர்களையும் அழைக்கின்ருேம்**

கொக்குவில். கலாபவன நிர்வாகிகள்.


## அறிவித்தல்

கட்டைவேலி மெதடிஸ்த ஆலய வளவுக்குள் புதிதாய்க் கட்டப்பட இருக்கும் குருமனைக் கட்டிட வேலே கொன்றராக்ரில் விடப்பட இருக்கிறது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அதற்கெனக் குறிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களில் 10-10-65 க்கு முன் தத்தம் மதிப்பீடுகளை விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களைப் பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். கட்டிடப் படத்தைப் பார்க்க விரும்பினுல் இதே விலாசத்தில் நேர்முகதாவில் பார்த்துக்கொள்ள வேண்டும்.

விலாசம்:- திரு. ஜோ. மு. ஆழ்வாப்பிள்ளே, அருளகம், கல்லூரி வீதி, பருத்தித்துறை. 885


யாழ். வை. எம். ஸி. ஏ; வை. டபிள்யு. ஸி. ஏ. நிதிக்காக
கொழும்பு வை. எம். ஸி. ஏ. அளிக்கும்
''யாழ்ப்பாணத்திலிருந்து வருகிருர்'' நாடகம்
அக்டோபர் 1, 2ந் திகதிகளில் மாலே 6-30க்கு யாழ். நகர மண்டபத்தில் நடைபெறும்.
கட்டணம்:
ரூ.10/- ரூ.7-50/ ரூ.5/ ரூ.3/-
பொக்ஸ்பிளான் — யாழ். ஐக்கிய வியாபாரச்சங்கத்தில். 886


உதைபந்தாட்டம்

## ஸ்ரார் கழகத்துக்கு வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

பண்டத்தரிப்பு ஸ்ரார் விளேயாட்டுக் கழகத்திற்கும் சங்கிலியன் விளேயாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

## பிறந்தநாள் விழா



**அடேயப்பா!**
**இப்படியும் ஒரு அதிசயமா?**
என்பது போலச் சிரித்து தனது பிறந்த நாளேக் கொண்டாடிய அளவெட்டியைச் சேர்ந்த செல்வி ஸ்கொலஸ்ரிக்கா யேம்ஸ்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் கச்சாய் சின்னத்தம்பி செல்லேயா

வழக்காளி

இல. 3021/P.

எதிராக

1. உடுப்பிட்டி இராமலிங்கம் நடராசா.
2. கச்சாய் சபாபதிப் பிள்ளே சச்சிதானந்தம் சின்னத்தம்பி.
3. திருக்கோணமலே திருஞானசம்பந்தன் வீதி. 410, S. கனகரத்தினமும்,
4. ஷை வீதி பெண் நாகேஸ்வரியும்,
5. ஷை வீதி S. அளகராசாவும்.
6. ஷை வீதி பெண் பரமேஸ்வரியும்,
7. யாழ்ப்பாணம். டேவிட் ரேட், 13, H. S. இராசையா கைம்பெண் எமிலி இராசம்மா

எதிரிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி கரைச்சிப்பற்று முரசுமோட்டை இறை.

நெடுங்கேணி வயல் நெ பர. 200. எல்லே கிழக்கு முத்துக்குமாரு பெண் ஞான பூங்கோதைக்குரிய வாதனம். வடக்கு முத்துக்குமாரு பெண் ஞானபூங்கோதைக்கும் விஞசித்தம்பி பொன்னேயாவுக்கும் பங்காளருக்குமுரிய வாதனங்கள். மேற்கு பீலிதெற்கு பீபியும் ருேட்டும். இதில் இதற்கூடாகத் தெருவுக்கெடுக்கப்பட்ட நிலம் பிறநீங்கலாக மிகுதி முழுவதும்.

என்னும் ஆதனம் 1951ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படிகோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி ஆதனத்தில் உரிமை கோருபவர்கள் மேற்படி கோட்டில் 1965-ம் ஞூ ஐப்பசி மீ 14-ம் திகதி 9 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளேபண்ணப்பட்டிருக்கிருர்கள்.

கோட்டாரின் கட்டளேப்படி

செ. சடாச்சரம்,
சக்கிடுத்தாருக்காக.

1965-ம் ஞூ புரட்டாதி மீ 23-ம் திகதி. 884

## கிராமப்புறத்துக்கு நீர் விநியோக திட்டம்

திருக்கோணமலே, புதன்

கிராமப்பகுதிக்கு நீர் விநியோகத் திட்டங்களை ஆரம்பிப்பதென உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அலுவலகத்தில் கூடிய மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. நீர்வேலிப்பகுதி என்ஜினியர் திரு. [illegible] மன்யாவே மேற்படி திட்டத்தைச் சமர்ப்பித்தார்.



## வானொலி

### கொழும்பு

வியாழன் 30 - 9 - 65

(செய்திகள்: காலே 7-15, பகல் 12-45, மாலே 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலே 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனே, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனே, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலே 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 பேச்சு, 7-15 வயலின், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 நிலேய ஒலிப்பதிவுகள்.


இலங்கையில் முதன்முதலாக
யாழ். வின்ஸர் திரையில்
1 - 10 - 65
வெள்ளிக்கிழமை முதல் பிற்பகல் 2-30 மணிக் காட்சியுடன் ஆரம்பமாகிறது
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்,
சரோஜாதேவி,
சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த
**புதிய பறவை**


## வரி விளம்பரம்

### தேவை

ஆங்கில அறிவுள்ள பிணேப் பணம் கட்டக்கூடிய கெசியர் ஒருவர் உடனே தேவை. மாதாந்தச் சம்பளம் ரூபா 200/- வழங்கப்படும். றூபா இன்டஸ்றீயல்வேக்ஸ் C/o கொலம்பியா ஸ்ருடியோ, வவனியா. 1081

மிருசுவில் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேஜர் தேவை. கூட்டுறவுப் பயிற்சி தராதரம் உடையவராயும், வயது 22 - 40க்குட்பட்டவராயும், பிணேப்பணம் ரொக்கம் ரூ. 500/-உம், உறுதி ரூ. 2000/-உம் கட்டக்கூடியவராயும் இருத்தல் வேண்டும். வேதனம்: ரூ. 75/- சகலபடி உட்பட. 11-10-65-க்கு முன் தலேவருக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். 1082

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளேயார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**வியாபாரம் பெருக ளம்பரம் செய்க**


REGAL--JAFFNA
NOW SHOWING!
Edgar Wallace's
Scotland yard Accepts
The Challenge

4-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலே) விஜிதா (ஹட்டன்)
மொடேர்ன் (பண்டாரவளே) தீவொளி (நுவரெலியா) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளே) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2 காட்சிகள்;
சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், சாவித்திரி
எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். விஜயா
நடிக்கும்



கைகொடுத்த தெய்வம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செனட்சபையில் சிறுபான்மை தமிழருக்கு இடம்

## யாழ். மாநகரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் செனட் சபையில் சிறுபான்மைத் தமிழருக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு தமிழரசு, தமிழ்காங்கிரஸ் கட்சிகளைக் கேட்டுக் கொள்வதென்ற தீர்மானம் நேற்று மாலை நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

அக்கட்சிகள் இக்கோரிக்கையை ஏற்காத பட்சத்தில் அரசாங்கத்திடமாவது இதுபற்றி கோருவது என்ற தோரணையில் ஒரு திருத்தமும் சேர்த்துக்கொள்ளப் பட்டது.

மேற்கண்ட பிரேரணையைப் பிரேரித்துப் பேசிய திரு.ஏ.ரி.துரையப்பா கூறியதாவது;- செனட்சபையிலோ, பாராளுமன்றத்திலோ தற்பொழுது சிறுபான்மைத் தமிழர் எவரும் இருக்கவில்லை. அந்தக் குறையை நீக்க, காலியாகவிருக்கும் செனட்சபையில் சிறுபான்மைத் தமிழர் ஒருவரை தெரிவு செய்வது அவசியம், தமிழரசு, தமிழ்காங்கிரஸ் தலைவர்கள் இதற்கு முயற்சி எடுக்கவேண்டும். கடந்த தேர்தலின்போது, சிறுபான்மைத் தமிழருக்கு ஒருதொகுதியை இக்கட்சிகள் ஒதுக்காததால் பெரும் தவறு செய்துவிட்டார்கள். ஆதலால் செனட்சபையிலாவது சிறுபானமைத் தமிழருக்கு இடம் எடுத்துக் கொடுக்கவேண்டும்.

இப்பிரேரணையை அனுவதித்துப் பேசிய திரு.ரி.எஸ். துரைராசா கூறியதாவது:- செனட்சபையில் சிறுபான்மைத்தமிழர் ஒருவர் இடம் பெறுவதற்கு ஒத்துழைப்போம் என்று தமிழ் காங்கிரஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது. தமிழரசுக்கட்சி அதுபற்றி இன்னும் ஒன்றும் கூறவில்லை. அவர்களும் இவ்விஷயத்தில் ஒத்துழைப்புக் கொடுப்பார்கள்என நம்புகிறேன்.

யாழ்ப்பாணப் பகுதியில் சிறுபான்மைத் தமிழ்மக்கள் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீதம் இருப்பதாகவும், பாராளுமன்றத்தில் அவர்கள் இடம் பெருததையிட்டு வருத்தமடைவதாகவும், எந்தக்கட்சியினராயிருந்தாலும், சிறுபான்மைத் தமிழர் ஒருவரை செனட்சபையில் இடம்பெறச்செய்செய்வது அவசியம் என்றும், திரு. துரைராசா மேலும் கூறினர்.

செனட்சபைக்கு சிறுபான்மைத்தமிழர் ஒருவரை தெரிவு செய்வது சம்பந்தமாக பிரதமரையும் கோருவதென்று திரு.த.கந்தையா கொண்டுவந்த திருத்தம் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மனிதனின் மனநிலை மாறினல்தான் தீண்டாமையை ஒழிக்கமுடியுமென்றும், சாதி என்பது ஆதியில் இல்லாது இடையில் தோன்றியதென்றும், செனட்சபையில் சிறுபான்மைத்தமிழர் இடம்பெறுவது அவசியம் என்றும் திரு. கந்தையா கூறினர்.

திரு.என்.ரி.செல்லத்துரை பேசும்போது, இச்சபையில் இத்தீர்மானம் வந்ததையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும், எல்லோரும் இவ்விஷயத்தில் ஒற்றுமையாகஒத்துழைக்க வேண்டுமென்றும், தேசிய அரசாங்கத்தைச்சேர்ந்த கட்சிகள் மட்டுமன்றி, மற்றய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதற்கு ஆதரவளிக்க வேண்டுமென்றும் கூறினர்.

திரு. ஏ. ரி. துரையப்பா பேசுகையில் கூறியதாவது:- ஒரு முக்கிய பிரச்னைக்காக கூட்டப்பட்ட இந்த விசேஷ கூட்டத்திற்கு அங்கத்தவர்களில் பலர் சமூகமளிக்கவில்லை. இப்படியான ஒரு முக்கிய விஷயத்திற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும்.

மேயர் திரு. எஸ்.ஸி. மகாதேவா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு ஒன்பது அங்கத்தவர்கள் மட்டுமே சமூகமளித்திருந்தனர்,

## 'செனட்சபைக்கு சிறுபான்மைத் தமிழரை தெரிவு செய்க'

யாழ்ப்பாணம், புதன் செனட் சபைக்கு சிறுபான்மைத் தமிழர் ஒருவரை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பல தொகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கான சிறுபான்மை தமிழர்கள் கையெழுத்திட்ட ஒருமகஜரை தமிழரசு கட்சி தலைமைப் பீடத்திற்கு அனுப்பியுள்ளதாக தெரியவருகிறது.

மக்கள் நலன் உரிமை மன்ற காரியதரிசியாகிய திரு. எஸ். ஜே. அன்ரனியை சிறுபான்மை தமிழர் பிரதிநிதியாக செனட்சபைக்கு தெரிவு செய்ய முயற்சி எடுக்குமாறு அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

---

## வல்லிபுர ஆலய உற்சவம்

உடுப்பிட்டி, செவ்வாய் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகி இப்போது நடைபெற்றுவருகின்றன. தொடர்ந்து 17 நாட்கள் திருவிழா நடைபெறும். அக்டோபர் மாதம் 7-ம் திகதி சப்பறத்திருவிழாவும், 8-ம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் சரித்திரப்பிரசித்திபெற்ற கடல்தீர்த்தமும் நடைபெறும். கடைசிநாள் கேணித்தீர்த்தத்தின்று இரவு நாகர்கோவிலிலும் சரித்திரப் பிரசித்திபெற்ற போர்த்துக்கீசர் வருகையையொட்டிய கப்பல் திருவிழாவும் நடைபெறும்.

---

## புதிய தபால் ஊழியர் மகாநாடு

பம்பலப்பிட்டி, செவ். அகில இலங்கை புதிய அரசாங்க தபால் ஊழியர்களின் மகாநாடு வருகிற ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு பாசன்ஸ் வீதியிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

தபால் ஊழியர்களின் இழந்த உரிமைகளை மீண்டும் பெறுவதற்காகவும், சம்பளம் உயர்த்துவதற்கான தமது கோரிக்கைகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்கான தீர்மானங்கள் மற்படி மகாநாட்டில் நிறைவேற்றப்படும்.

## 'உயர்ந்த எண்ணத்தை பிரதிபலிக்க வேண்டும்'

நல்லூர், செவ். நாடகம் எழுதுவோர் தமது கற்பனையால் நாடகக் கதை ஒன்றினை உருவாக்கலாம். இல்லையேல் வரலாற்றுப் பின்னணியைக்கொண்டு அந்த வரலாற்றில் எவ்வித முரண்பாடும் இல்லாமல் நாடகங்களை எழுதலாம். இதனை விடுத்து பிறர் எழுதியிருப்பவற்றில் சிலசில பகுதிகளை ஒன்ருக்கி நாடகம் சொந்தமாக எழுதிவிட்டதாக எண்ணும் தவருன பண்பு நம்மிலிருந்து அகல வேண்டும்' என்று கலையரசு க. சொர்ணலிங்கம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாடக விழாவிற் பேசும்போதுகுறிப்பிட்டார்.

கலையரசு சொர்ணலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

நாடகங்கள் மேடையேற்றப்படும்போது ஒப்பனை விஷயத்தில் மிகவும் சிரத்தையுடன் இருக்கவேண்டும். நாடகம் பார்ப்போர் உள்ளங்களில் உயர்வான எண்ணத்தை ஒப்பனை ஏற்படுத்தும். நாடக நடிக நடிகையர் தமது முகங்களை மட்டும்ஒப்பனை செய்து கொண்டால் போதாது. பாத்திரத்திற்கு ஏற்ற வகையில் ஒப்பனை அமையவேண்டும்.

---

## சைவாதீன மகாநாடு

யாழ்ப்பாணம், புதன் ஸ்ரீலங்கா சைவாதீனத்தின் ஒன்பதாவது மகாநாடு சென்ற ஞாயிற்றுக்கிழமை வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையில் பண்டிதர் க. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது.

அவர் 'சைவமா, இந்துவா?' என்ற விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், 'எமது மரபுகளும் வசனநடைகளும் வழுவாது பேசுவதற்கும் எழுதுவதற்கும் நாவலர் தொடக்கம் சோமசுந்தரப்புலவர் வரையுள்ளவற்றைப் பின்பற்றினல் போதுமானது. அவர்கள் சைவம் என்று கூறினர்கள், எழுதினர்கள், சைவர்களாக வாழ்ந்தார்கள். இவர்கள் வளர்த்த சைவத்தமிழ் மரபையே ஸ்ரீலங்கா சைவாதீனமும் காத்துவருகிறது' என்ருர்.

பண்டிதர் வே. கந்தையா, காலஞ்சென்ற கலாநிதி சு. நடேசபிள்ளையின் சகுந்தலை வெண்பாவைப் பற்றிப் பேசினர். வேதாகமபூஷணம் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் ஞாயிறுநோன்பைப்பற்றியும், அது கட்டாயமான விடுதலையாக இருக்கவேண்டுமென்பதற்கு பல அத்தாட்சியை வேதாகமங்களிலிருந்து எடுத்துக் காட்டினர்.

விவாதத்தில் திருவாளர்கள் செ. சோமசேகரம், நா. கணேசலிங்கநாவலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## 'சமாதானத்துக்கு பிரார்த்தனை செய்வோம்'
## இந்திய ஜனதிபதி செய்தி

புதுடில்லி, செப்.28 சகல சமூகங்களுக்கிடையிலும் சமயங்களுக்கிடையிலும் ஐக்கியம் எற்பட நாம் உழைக்கவேண்டும். சமாதானத்தை நிலைநாட்ட நாம் ஒருவர்மீது ஒருவர் அன்புகொண்டு சகோதரர்களாக உழைப்போம். அடுத்தவாரம் 2-ந்திகதி வரும் மகாத்மாகாந்திஜீயின் ஜெயந்தி தினத்தன்று நாம்சமாதானத்துக்காகபிரார்த்தனை செய்வோம். அமைதியும் சமாதானமும் அவர் பெரிதும் விரும்பியவை என இந்திய ஜனதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் இன்று பொதுமக்களுக்கு வானெலி மூலம் விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

# யுத்த நிறுத்தம் மீறப்படுகிறது

புதுடில்லி, செப். 28 இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பினும் எல்லைகளில் இடையிடையே பீரங்கிச் சூடுகளும் துப்பாக்கிச் சூடுகளும் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டுள்ளது. பாகிஸ்தான் எல்லைக்குள் இந்திய விமானப்படை தாக்குதல் நடத்த முயற்சித்ததாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது. ஆனல் யுத்த நிறுத்தம் ஏற்பட்டபின் எந்த அரங்கிலும் விமானத் தாக்குதலை இந்தியா நடத்தவில்லை என இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். பாகிஸ்தா[ன்] ஊடுருவல்களைத் தொட[ர்]ந்து செய்து வருவதா[க] இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது. திரபுரா, கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் சண்டைகள் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சீனர்களின் ராணுவ நடவடிக்கை

இதற்கிடையில் லடாக் சிக்கிம் எல்லைகளில் சீனர்களின் ராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த எல்லைகளில் சீனர்கள் நில அறைகள் அமைத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சைவம் வளர்ந்தால்

(2-பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மத்தியில் பரப்ப முடிகிறதென்றும் அதுவுமன்றி சமயத்தின் சிறப்புப் பற்றியும் உணர முடிகிறதென்றும் கூறினர்.

திருவாட்டி மகாதேவி பத்மநாதன், இ. வைத்திலிங்கம், வித்துவான் சைவப் புலவர் க. கணபதிப்பிள்ளை, புலவர் ம. பார்வதிநாதசிவம், தேவார சங்கீத பூஷணம் சி. நடராசா ஆகியோர் விரிவுரையாற்றினர். எஸ். பரநிருபசிங்கம் தலைமையில் ஐயந்தெளிதல் நிகழ்ச்சி நடைபெற்றது. கலை நிகழ்ச்சிகளாக கைதடி சங்கீத வகுப்பு மாணவிகளின் இன்னிசைவிருந்தும் 'பலியும் பாவமும்' என்ற எழுதிடல் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் நாடகமும் இடம்பெற்றன.

### 4-ம் நாள் நிகழ்ச்சிகள்

சைவமகாநாட்டின் நான்காம்நாள் நிகழ்ச்சிகள் சைவப்பெரியார் திரு. த. குமாரசாமிப்பிள்ளை தலைமையில் கச்சியப்பர் அரங்கில் நடைபெற்றது.

சித்தாந்த சிரோன்மணி மு. மயில்வாகனம், திரு. சி. க. சுப்பிரமணியம் திரு. முருகேசு, பண்டிதை தவமலர் சின்னத்துரை, யாழ். காரியாதிகாரி செ. சிவஞானம், திரு. வே இரத்தினம் ஆகியோரின் விரிவுரைகள் இடம்பெற்றன.

கலை நிகழ்ச்சிகள் கிராம சபைத்தலைவர் திரு. க. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது இன்னிசை விருந்து, நடனம், நாடகம் ஆகியன இடம் பெற்றன.

---

## வல்வெட்டித்துறை,.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலவரமடைந்த பொலிசார் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அவர்களின் உதவியுடன் வேலும் மயிலுவை மோதியதாகக் கருதப்படும் இராணுவ ஜீப்பையும் அதன் பின்னல் சென்ற மற்றெரு இராணுவ ஜீப்பையும் பொலிசார் பொலிஸ்நிலையத்திற்குக் கொண்டுசென்றனர்.

இச்சம்பவம் பற்றி அறிந்த பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று பொலிஸ் அதிபருடன் ஆலோசனை செய்தார்.

### பொதுமக்களைத் தூஷித்தனர்

இரண்டு இராணுவ ஜீப்புகளையும் அதிலிருந்த இராணுவத்தினரும் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படுகையில் அங்கு திரண்டிருந்த பொதுமக்களை இராணுவத்தினர் தேவையற்ற வார்த்தைகளால் தூஷித்தனராம். இராணுவத்தினரின் நடவடிக்கையால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிஸ் நிலையத்துக்கும் சென்று இராணுவத்தினரின் நடத்தை குறித்து புகார்செய்ததுடன் தங்களுக்கு பாதுகாப்பும் நியாயமும் வழங்கவேண்டுமென்றும் கூறினர்.

பொதுமக்கள் அமைதியாகஇருக்கவேண்டுமென்றும் தாங்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ் உதவி சுப்பிரின்டென்ட் கேட்டுக்கொண்டார்.

என்ருலும்மக்கள் அமைதியடையவில்லை. விபத்துசம்பவம்பற்றி அறிந்த அரசாங்கஅதிபர் திரு. நெவில் ஜெயவீராவும் அங்குவந்து மக்களை அமைதியாகச் செல்லுமாறும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

[வல்]லிய நாடுகளுக்கு ஆயுதங்களைத்தாராளமாக அளித்தது. ஆனல் அந்த ஆயுதங்களை பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் ''விரோதியான'' புதுசீனத்துடன் பாகிஸ்தான் நெருங்கி உறவாடுகின்றது. இது அமெரிக்காவின் கண்களைச் சற்றே திறக்க வேண்டும். தான் ஒன்று நினைக்க நடப்பது வேருக இருக்கின்றது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இப்போதுஅமெரிக்காவைவிட ரஷ்யவிடமே அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் உதவி கேட்பதானும் அதனிடம் நம்பிக்கை இல்லை.

இதைப்பற்றி அமெரிக்கா சற்றே புனராலோசனை செய்ய ஐ. நா. ஸ்தாபனத்தைப் பலப்படுத்தவும் காஷ்மீர் நெருக்கடி பயன்படுவதாகவும் இதன்பயனுக புதுசீனம் ஐ நா.ஸ்தாபனத்தில் இடம்பெறுவதாயின், இன்று மிகப் பயங்கரமாகத் தோன்றும் உலக நிலை திடீரென நல்லபடியாக மாறவும் வழிபிறக்கும். மலைபோல் வந்தது பனிபோல் நீங்கலாம்.

ரஷ்யாவுக்கும் சீனத்துக்கும் வேற்றுமைகளும் அவநம்பிக்கைகளும் அதிகரித்துள்ளது. அமெரிக்கா துணிச்சலுடன் மனம்மாற உதவ வேண்டும்.

∴ .. ∴

கந்தமலர்க்கொன்றையணி சடையாயன் தன்னைக் கதிர்
விடுமா மணி பிறங்கு கனகச்சோதிச், சந்தமலர்த்
தெரிவையொரு பாகத்தானைச் சராசர நற்ருயானை
நாயேன் முன்னைப், பந்த மறுத்தாளாக்கிப் பணி
கொண்டாங்கே பன்னிய நூல் தமிழ் மாலை பாடுவித்
தென், சிந்தை மயக்கறுத்த திருஅருளினனைச் செங்காட்
டங்குடியதனிற் கண்டேன் நானே.

— அப்பர்சுவாமிகள்

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org